## கொடைக்கானல் நகராட்சி

2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ஆம் நாள் (22.01.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சி சீனிவாசபுரம் பகுதியில் நகராட்சி பாதை இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளது தொடர்பாக கீழ்கண்ட நபர்களால் நகராட்சிக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டு மேற்கண்ட வழக்குகள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.T.S.முகமது முகைதீன் அவர்களால் நகராட்சி சார்பாக ஆஜராகி நடத்தப்பட்டு வருகிறது. இவ்வழக்குகளுக்கு வழக்கு கட்டணமாக ஒரு வழக்கிற்கு ரூ.7500/– வீதம் இரண்டு வழக்கிற்கு தொகை ரூ.30,000/– வழங்கக் கோரி பட்டியல் சமர்ப்பித்துள்ளார். இவ்வழக்குகளுக்கான கட்டணத்தை நகராட்சி நிலை வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வழக்கு எண். | பெயர் |
|---|---|---|
| 1 | WP(MD)No.18637 of 2020 | அல்போன்சா |
| 2 | WP(MD)No.16570 of 2020 | அல்போன்சா, ஏசுராஜா, பாலாஜி |

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். (ந.க.எண்.3310/2019/எப்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **956, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சியின் புதிய பொலிரோ வாகனம் TN 57 BU 9623 இதுவரை 60,000 கி.மீட்டருக்கு மேல் ஓடியுள்ளது. எனவே, இவ்வாகனத்தின் ஆயில் சர்வீஸ் மற்றும் இதர மராமத்து சர்வீஸ் பணிகளை வாகனத்தின் உற்பத்தி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற மதுரை, கப்பலூர், AMPL பணிமனையில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 35,000/– (ரூபாய் முப்பத்து ஐந்தாயிரம் மட்டும்) ஆகும்.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ( கோப்பு ந.க.எண். 3564/2018/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **957, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) அரசாணை எண்.84, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள்.25.06.2018ன்படி, ஒருமுறை உபயோகித்து தூக்கி எறியும், 1) உணவுப் பொருட்களுக்கு உபயோகப்படும் பாலித்தீன் தாள் உறை, 2) உணவு அருந்தும் மேஜையின் மீது விரிக்கப்படும் பாலித்தீன் தாள்கள், 3) தெர்மாகோல் தட்டுகள், 4) பாலித்தீன் பூசப்பட்ட காகித தட்டுகள், 5) பிளாஸ்டிக் பூசப்பட்ட காகித தட்டுகள், 6) பாலித்தீன் தேநீர் குவளைகள், 7) பாலித்தீன் குவளைகள், 8) தெர்மாகோல் குவளைகள், 9) நீர் நிரப்ப பயன்படுத்தும் பைகள் / பொட்டலங்கள், 10) பாலித்தீன் உறிஞ்சு குழல்கள், 11) பாலித்தீன் பைகள் (எந்த அளவிலும் எந்த தடிமனாக இருப்பின்), 12) பாலித்தீன் பூசப்பட்ட பைகள், 13) பாலித்தீன் கொடிகள், 14) நெய்யாத பாலித்தீனாலான எடுத்து செல்லும் பைகள் போன்ற 14 வகையான பொருட்களை தயாரிக்கப்படுவதும், சேமித்து வைப்பதும், விநியோகிப்பதும், போக்குவரத்து செய்வதும், விற்பதும் 01.01.2019 முதல் தடை செய்யப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.15120 / 2019 மற்றும் WMP. Nos.15106 & 15112 / 2019 ன் தீர்ப்பு நாள்.29.05.2019ன்படி திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது தலைமையில் நடைபெற்ற 03.02.2020ம் தேதிய திடக்கழிவு மேலாண்மை ஆலோசனைக் கூட்டத்தில் கொடைக்கானல் சுற்றுலா நகரம் என்பதால் வெளிநாடு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை வருடந்தோறும் அதிகளவில் உள்ளதால் நெகிழி பயன்பாட்டினை தவிர்த்து நகர் சுற்றுப் புறங்களை தூய்மையாக பராமரிக்க வேண்டி அறிவுறுத்தியதற்கிணங்க 13.02.2020ம் தேதியில் நகராட்சி அலுவலகத்தில் நெகிழி மாசில்லா கொடைக்கானல் ஒருங்கிணைப்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக 21.01.2021ம் தேதியில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நெகிழி மாசில்லா கொடைக்கானல் ஒருங்கிணைப்பு மற்றும் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி,

1) உணவு பொருட்கள் கையாள பயன்படுத்தும் பிளாஸ்டிக் கையுறை.
2) பிளாஸ்டிக் பேக்கிங் செய்யப்படும் பொருட்கள்.
3) பூச்செண்டுகள் மற்றும் பரிசு பொருட்கள் சுற்ற பயன்படும் பிளாஸ்டிக்குகள்.
4) லாமினேஷன் செய்யப்பட்ட காகித தாள்கள்.
5) லாமினேஷன் செய்யப்பட்ட பேக்கரி அட்டை பெட்டிகள்.
6) வாழை இலை வடிவ நெகிழிகள்.
7) 5 லிட்டருக்கு குறைவாக உள்ள தண்ணீர் மற்றும் குளிர்பான நெகிழி (PET BOTTLES) பாட்டில்கள்.

நெகிழி மாசில்லா கொடைக்கானலாக உருவெடுக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதயிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **958, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021 ன் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை அவர்களின் மூலம் மாநில அளவிலான நாளிதழில் அறிவிப்பு செய்த வகையில் நாளிதழ் கட்டணமாக கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை செலுத்த கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் விபரம் | விளம்பர நிறுவனத்தின் விபரம் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021 | Bright Advertising , Chennai<br>1. Financial Express<br>2. Thinabhoomi | 9337 dated 24.12.2020 | **18,848/–** |

மேற்கண்ட தொகையினை நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். (கோப்பு .ந.க.எண். 1275/2020/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **959, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) பொது நிதி 2020–2021 ன் கீழ் நகராட்சி குப்பை கிடங்கில் மின் பணி மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல் மூலம் மாவட்ட அளவிலான நாளிதழில் அறிவிப்பு செய்த வகையில் நாளிதழ் கட்டணமாக கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை செலுத்த கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | விளம்பர நிறுவனத்தின் விபரம் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி குப்பை கிடங்கில் LTCT Electrification with starter, Panel Board connection to Main பணிகள் மேற்கொள்ளுதல் | மதுரை மணி, மதுரை. | 71 dated 8.1.2021 | 23,814/– |

மேற்கண்ட தொகையினை நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். (கோப்பு .ந.க.எண். 620/2020/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **960, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சி செல்லபுரம் பகுதி திரு.எம்.ஜோசப் ரத்தினசாமி மற்றும் ஜே.மரிய அந்டோனியோ என்பவர் நில உபயோக மாற்றம் தொடர்பாக, கீழ்க்கண்ட விபரப்படி நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு மேற்கண்ட வழக்குகள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.T.S.முகமது முகைதீன் அவர்களால் நகராட்சி சார்பாக ஆஜராகி நடத்தப்பட்டு வருகிறது. இவ்வழக்கிற்கு வழக்கு கட்டணமாக ஒரு வழக்கிற்கு ரூ.7500/– வழங்கக் கோரி 11.01.2021 தேதியிட்ட பட்டியல் சமர்ப்பித்துள்ளார். இவ்வழக்குகளுக்கான கட்டணத்தை நகராட்சி நிலை வழக்கறிஞருக்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வழக்கு எண். | பெயர் |
|---|---|---|
| 1 | WP(MD)No.19436 of 2020 | எம்.ஜோசப் ரத்தினசாமி மற்றும் ஜே.மரிய அந்டோனியோ |

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். (ந.க.எண்.125/2012/எப்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **961, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) இந்நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து பழனி நகராட்சிக்கு பணிமாறுதலில் சென்று 30.06.2003ல் ஓய்வு பெற்ற திரு.ஆர்.ஜெயராமன் என்பவர் தனது பணிநீக்க காலத்தினை முறைப்படுத்தி ஊதியம் வழங்கப்பட்டதில் 09.06.2000 முதல் 12.08.2002 வரை நிலுவை ஊதியம் வழங்கக் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுக்கப்பட்ட வழக்கு எண்.18665/2020 வழக்கில் ஆஜராக வழக்கறிஞர் கட்டணத் தொகை ரூ.15000/– திரு.லூர்து பவுல் மவுரியா, வழக்கறிஞர்க்கு வழங்கக் கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **962, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சி கீழ்க்குண்டாறு குடிநீர் திட்டத்தின்கீழ் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைக்கும் பொருட்டு, சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021 (SRP 2020-2021) ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு அரசாணை நிலை எண். 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (நநி2) துறை நாள். 13.11.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந்.க.எண். 20557/2020/இ3 நாள். 16.12.2020 ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட பணிகளை மேறகொள்வதற்கு 12.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| சிப்பம் எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| I | நாயுடுபுரம் ஏ.பி.டி. பார்சல் சர்வீஸ் முதல் சிவனடி சாலை சந்திப்பு, எம்.எம். தெரு முதல் கே.பி.எஸ்.பள்ளி, ஆண்டவர் பாதம் முதல் லீ–போஸ் ஹோட்டல் மற்றும் செட்டியார் பார்க் பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி | 200.00 | 1. பி. முரளி<br>2. எம்.ஆர்.பிலால் இப்ராஉறிம் | 4.95 % அதிகம்<br>6.19 % அதிகம் |
| II | செண்பகனூர் புதிய உரக்கிட்ங்கிற்கு தார்ச்சாலை அமைக்கும் பணி | 200.00 | 1. பி. அரசகுமார்<br>2. ஜி. சிவக்குமார் | 4.96 % அதிகம்<br>6.52 % அதிகம் |
| III | அப்பர்லேக் சாலை மற்றும் வி.ஜி.பி. பகுதி தார் சாலை அமைக்கும் பணி. | 200.00 | 1. . எம்.ஆர்.பிலால் இப்ராஉறிம்<br>2 .பி. முரளி | 4.95 % அதிகம்<br>6.52 % அதிகம் |
| IV | பழைய அப்பர்லேக் சாலை மற்றும் புதுக்காடு பகுதிகளில் சிமிண்ட் சாலை அமைக்கும் பணி | 200.00 | 1. . ஆர். தண்டபாணி<br>2 .பி. முரளி | 4.95 % அதிகம்<br>5.20 % அதிகம் |
| V | ரைபிள் ரேஞ் சாலை மற்றும் பழைய கான்வெண்ட் சாலை சிமிண்ட் சாலை அமைக்கும் பணி | 200.00 | 1. மெசர்ஸ். விசாகன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், மதுரை.<br>2. திரு ஜி. இளஙகுமரன், மதுரை | 4.90 % அதிகம்<br>7.00 % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். கூடுதல் தொகையினை நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **963, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) கொடைக்கானல் நகராட்சியின் கீழ்க்கண்ட 10 இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட தானியங்கி குடிநீர் மையங்கள் அமைத்திட விருப்பம் கோரும் அறிவிப்பு (Expression of Interest) 20.01.2011 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒரே ஒரு விருப்ப ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

Name of the Bidder : **M/s. Shri Kumaran Aquaa**
**756/4C2 Kurunji Enclave Layout**
**Vadakavunji Village,**
**Kodaikanal (Dindigul District)**

வரப்பெற்ற விருப்ப ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கலாம்.

1). ரூ. 20/– முத்திரை தாளில் ஒப்பந்த பத்திரம் எழுதித் தரப்படவேண்டும்
2) பணி ஆரம்பிக்கும் முன் உரிய அனுமதி நகராட்சி ஆணையரிடம் பெறப்படவேண்டும்.
3) பணிகள் 30 தினஙகளுக்குள் முடிக்கப்படவேண்டும்.
5) அவ்வப்பொழுது நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளரால் தெரிவிக்கப்படும் வழிமுறைகளை கடைபிடிக்கப்பட வேண்டும்.

6) தமிழ்நாடு அரசு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 43/1198 of 1998 ன்படி பணி உத்திரவு வழஙகப்படுகிறது.

7) பாதுகாக்கப்பட்ட தானியங்கி குடிநீர் மையம் தஙகளது சொந்த செலவில் PPP மற்றும் பராமரித்தல் மற்றும் இயக்குதல் முறையில் அமைக்கப்படவேண்டும்.

8) மாதாந்திர மின்சார செலவினம் தஙகளால் செலுத்தப்பட வேண்டும்.

9) பாதுகாக்கப்பட்ட குடிநீர்தான் விநியோகம் செய்யப்படுகிறது என்பதனை உறுதி செய்திடல் வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பரிசோதனை சான்று பெறப்பட வேண்டும்.

10) பயனாளிகளுக்கு E-cards தஙகளால் வழஙகப்பட வேண்டும்.

11) ஒப்பந்த காலம் ஐந்து ஆண்டுகள் முடிவுறும் நிலையில் 10 இடஙகளில் அமைக்கப்பட்டுள்ள தானியஙகி குடிநீர் மையஙகள் நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளவாறு மீண்டும் புதுப்பிக்கப்படவேண்டும்.

12) 10 இடஙகளில் குடிநீர் மையஙகள் அமைக்கப்பட்டபின் இடம் குறித்து எந்த ஒரு உரிமையும் கோர இயலாது.

13) வருடத்திற்கு 1 இயந்திரத்திற்கு ரூ.2500/– வீதம் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **964, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

10) கொரோனா தடுப்பு நடவடிக்கையின் பொருட்டு தற்போது மாவட்ட ஆட்சியரகம், நகராட்சி நிர்வாகா ஆணையரகம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக ஆய்வு கூட்டஙகள் அனைத்தும் காணொலி காட்சி மூலம் நடத்தப்பட்டு வருகிறது. காணொலி காட்சி மூலம் அலுவலகத்தில் இருந்து ஆய்வு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கும், ஆணையரின் குடியிருப்பில் தொலைதொடர்பு சரிவர கிடைக்காத காரணத்தினால் Modem Router, Hand Set, Wireless Router , webcam, Cable network அமைக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. எனவே, மேற்கண்ட தொலைதொடர்பு சாதனஙகளை ஒப்பந்தப்புள்ளி கோரி அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) ஆகும்.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **965, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

11) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 57 AU 3416 டிப்பர் லாரிக்கு பழுது நீக்கும் பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.893, நாள். 30.09.2020ம் தேதி அனுமதி பெறப்பட்டு அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனைகளில் 30.12.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | வைப்புத் தொகை ரூ. | லேபர் சார்ஜ் ரூ. | ஸ்பேர் பார்ட்ஸ் ரூ | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | ASR Body Works,<br>No.17,18,19, Aadhisivan Nagar,<br>Udhayam Nagar,<br>Kovilpapakudi,<br>Madurai - 625 018. | ரூ.4000/– | ரூ.54,805/– | ரூ.1,29,222/– | ரூ.1,84,027/– |
| 2 | Sadhguru Motors,<br>Plot.No.56. Priyanka Nagar,<br>Kovil Papakudi,<br>Madurai-625 018. | ரூ.4000/– | ரூ.59,341/– | ரூ.1,32,074/– | ரூ.1,91,415/– |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ASR Body Works, Kovil Papakudi, Madurai-18 நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவுத் தொகை ரூ.184027/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து என்பத்து நான்காயிரத்து இருபத்தி ஏழு மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1076/2020/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **966, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

12) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 57 W 4937 டிப்பர் லாரிக்கு பழுது நீக்கும் பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 892, நாள். 30.09.2020ம் தேதி அனுமதி பெறப்பட்டு அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனைகளில் 30.12.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | வைப்புத் தொகை ரூ. | லேபர் சார்ஜ் ரூ. | ஸ்பேர் பார்ட்ஸ் ரூ | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | ASR Body Works,<br>No.17,18,19, Aadhisivan Nagar,<br>Udhayam Nagar,<br>Kovilpapakudi,<br>Madurai - 625 018. | ரூ.4000/– | ரூ.60,805/– | ரூ.1,34,422/– | ரூ.1,95,227/– |
| 2 | Sadhguru Motors,<br>Plot.No.56. Priyanka Nagar,<br>Kovil Papakudi,<br>Madurai-625 018. | ரூ.4000/– | ரூ.63,341/– | ரூ.1,36,574/– | ரூ.1,95,915/– |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ASR Body Works, Kovil Papakudi, Madurai-18 நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவுத் தொகை ரூ.195227/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து தொன்னூற்று ஐயாயிரத்து இருநூற்று இருபத்தி ஏழு மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1077/2020/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **967, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

13) பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிக்கு பயன்படுத்தப்படும் தளவாடச் சாமான்கள் வாங்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்துவிட்டதால், எதிர்வரும் சீசன் காலங்களில் சுணக்கமின்றி தூய்மைப் பணி மேற்கொண்டு நகரினை தூய்மையாக பராமரிக்க தளவாடச் சாமான்கள் வாங்கி வழங்க வேண்டி துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு அளித்துள்ளனர். இதன் பேரில் துப்புரவுப் பணியின் அவசர அவசியம் கருதி துப்புரவுப் பணிக்கு தேவைப்படும் தளவாடச் சாமான்கள், வாங்கி வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.301/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **968, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

14) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளான வீடு மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைகளை தரம் பிரித்து வாங்கும்பணி சேகரிக்கப்படும் குப்பைகளை உரக்கிடங்கிற்கு எடுத்துச் சென்று கையாளும்பணி நடைபெற்று வருவதாகவும், இப்பணிகளை மேலும் திறம்பட மேற்கொண்டு நகரின் தூய்மையினை தொடர்ந்து பராமரிக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்களும், கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை மேற்கொள்வதற்கு தேவையான விழிப்புணர்வு ஸ்டிக்கர்களும், வடகிழக்கு பருவமழை முடிவுற்ற நிலையில் டெங்கு காய்ச்சல் பரவலை தடுக்கும் பொருட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஆகியவை வாங்கி வழங்க வேண்டி துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு அளித்துள்ளனர். எனவே, மேற்கண்ட மூன்று வகையான ஸ்டிக்கர்கள் தலா 10,000 வீதம் 30,000 விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சங்கம் மூலம் வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.4,50,000/– (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.471/2020/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **969, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

15) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு சாதனங்கள் வாங்கி வழங்கி இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டதால், தூய்மைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு சாதனங்கள் வாங்கி வழங்க வேண்டி துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு அளித்துள்ளனர். இதன் பேரில் தூய்மைப் பணியாளர்களுக்கு தலைக் கவசம், ஒளிரும் ஜாக்கெட், ரப்பர் கையுறை, காலுறை மற்றும் முகக் கவசம் ஆகியவை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சங்கம் மூலம் வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.1564/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **970, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

16) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிக்கு குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 W 9634 டம்பர் பிளேசர் லாரிக்கு தகுதிச் சான்று ஜனவரி 2021ல் முடிவடைவதால் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்காக வாகனத்தின் பழுது நீக்க பணிகள் மேற்கொள்ள வேண்டுமென துப்புரவு ஆய்வாளர் குறிப்பு கொடுத்துள்ளார். இதன் பேரில் TN 57 W 9634 டம்பர் பிளேசர் லாரிக்கு பழுது நீக்க பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,70,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்)ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) துப்புரவுப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.22/2021/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **971, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

17) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிக்கு குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 W 9357 டம்பர் பிளேசர் லாரிக்கு தகுதிச் சான்று ஜனவரி 2021ல் முடிவடைவதால் தகுதிச்சான்று புதுப்பிப்பதற்காக வாகனத்தின் பழுது நீக்க பணிகள் மேற்கொள்ள வேண்டுமென துப்புரவு ஆய்வாளர் குறிப்பு கொடுத்துள்ளார். இதன் பேரில் TN 57 W 9357 டம்பர் பிளேசர் லாரிக்கு பழுது நீக்க பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) துப்புரவுப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
3) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.21/2021/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **972, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

18) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான ECC சாலையின் மேல் பகுதியில் உள்ள நீர்த்தேக்கத்தில் இருந்து (Check dam) குடிநீர் விநியோக குழாய்கள் அமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு 12.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான ECC சாலையின் மேல் பகுதியில் உள்ள நீர்த்தேக்கத்தில் இருந்து (Check dam) குடிநீர் விநியோக குழாய்கள் அமைத்தல் | 5.40 | எஸ்.குமரேசன்<br>பி. சுப்பிரமணி | 0.05% குறைவு<br>0.41% அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு எஸ்.குமரேசன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **973, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

19) இந்நகராட்சியில் கொரோனா முன்னெச்சரிக்கை தடுப்பு பணி மேற்கொள்ள தேவைப்படும் கிருமி நாசினிகளான, நீர்த்த சுண்ணாம்புத்தூள், பிளீச்சிங் பவுடர் இருப்பு குறைவாக உள்ளதாலும், தற்சமயம் பொது முடக்கம் சிறிது சிறிதாக தளர்வு செய்து கொண்டு வருவதாலும், சுற்றுலாப் பயணிகளின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் நகர்ப்பகுதிகளில் கொரோனா தடுப்புப்பணி மேற்கொள்ள 6 மெ.டன் பிளீச்சிங் பவுடர் மற்றும் 12 மெ.டன் நீர்த்த சுண்ணாம்புத்தூள் வாங்கி வழங்க வேண்டி துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு அளித்துள்ளனர். இதன் பேரில் 6 மெ.டன் பிளீச்சிங் பவுடர் மற்றும் 12 மெ.டன் நீர்த்த சுண்ணாம்புத்தூள் துப்புரவு பணியின் அவசர அவசியம் கருதி வாங்கிக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.6,00,000/– (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்)ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.471/2020/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **974, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

20) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வார்டு டி, பிளாக் 18, நகரளவு எண். 15, பிரஞ்ச் லேண்ட் பகுதியில் மூலதன மானிய நிதி 2017–2018 ன் கீழ் தூய்மை பணியாளர்கள் குடியிருப்பு புதியதாக கட்டப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளது. மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களின் 1.12.2020ம் தேதிய ஸ்தல ஆய்வு குறிப்பில் திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத பணிகளை உடன் மதிப்பீடு தயார் செய்து செய்திட அறிவுறுத்தியதற்கிணங்க கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள பொது நிதியின் மூலம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | புதியதாக கட்டப்பட்டுள்ள தூய்மை பணியாளர்கள் குடியிருப்பில் E மற்றும் F தொகுப்புகளில் ( Block E & F) குடிநீர் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் | 9.90 |
| 2 | புதியதாக கட்டப்பட்டுள்ள தூய்மை பணியாளர்கள் குடியிருப்பில் F தொகுப்பில் ( Block - F) –ல் மண் சரிவினை தடுக்கும் பொருட்டு தடுப்பு சுவர் அமைத்திடல் | 10.00 |
| 3 | புதியதாக கட்டப்பட்டுள்ள தூய்மை பணியாளர்கள் குடியிருப்பில் A,B,C,D,E & F தொகுப்பில் ( Block - A,B,C,D,E & F) –ன் முகப்பு பகுதியில் சிமிண்ட் கற்கள் பதித்து அழகுப்படுத்துதல் | 9.10 |
| 4 | புதியதாக கட்டப்பட்டுள்ள தூய்மை பணியாளர்கள் குடியிருப்பில் E தொகுப்புகளில் ( Block E ) மின்பணி மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள | 9.50 |
| 5 | புதியதாக கட்டப்பட்டுள்ள தூய்மை பணியாளர்கள் குடியிருப்பில் F தொகுப்புகளில் ( Block F ) மின்பணி மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள | 9.60 |
| 6 | புதியதாக கட்டப்பட்டுள்ள தூய்மை பணியாளர்கள் குடியிருப்பில் (24 குடியிருப்புகளுக்கும் ஒருங்கிணைந்த ) 1.00 லட்சம் கொள்ளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி கட்டுதல் | 9.45 |
| 7 | புதியதாக கட்டப்பட்டுள்ள தூய்மை பணியாளர்கள் குடியிருப்புகளுக்கு Bio-Digester கட்டமைப்பு ஏற்படுத்துதல் | 10.00 |

அலுவலக குறிப்பு . அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **975, நாள். 22.01.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.